துறையிலா அல்லது தனியார் துறையிலா? எல்லா மாவட்டங்களும் பாதிக்கப்படாமல் இந்த சர்வீஸ் ஸ்டேஷன்கள் ஆரம்பிக்கப்படுமா என்பதை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1967-ம் ஆண்டில் அவர்கள் உருவாக்கிய திட்டம் இது. நான் முதலில் கூறியதுபோல், தஞ்சாவூர், இராமநாதபுரம், தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சேலம் ஆகிய மாவட்டங்களில் பணிநிலையங்களை உருவாக்கவேண்டும் என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. இதை இப்பொழுது அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதை ஒரு தனிக்குழு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அக்ரிகல்சரல் ரி-பைனான்ஸ் கார்பரேஷனை ரூ. 72 கோடி கேட்டிருக்கிறோம். அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் 3,000 டிராக்டர்கள் கொடுப்பதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. அதை ஒத்துக் கொண்டுவிட்டார்கள். எனவே விரைவில் அதுவும் கிடைக்கும் என்று உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. முனு ஆதி : டிராக்டர்கள் 20,000, 25,000 ரூபாய் விலையிலே இருப்பதால் பெரிய பெரிய நிலப் பிரபுக்கள்தான் வாங்க வசதி ஏற்படுகிறது. இப்பொழுது ரூ. 7,500 விலையில் ஒரு டிராக்டர் வந்திருக்கிறது. இதை அரசு எல்லா விவசாயிகளுக்கும் கடன் வாரியாக அல்லது இந்த சர்வீஸ் ஸ்டேஷன் மூலமாக விநியோகம் செய்தால் ஏராளமான உணவு உற்பத்தியாகும். ஆகவே, இந்த ரூ. 7,500 விலையுள்ள டிராக்டரை அறிமுகப்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைப் பற்றி விவரம் ஒன்றும் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. அ. மாரிமுத்து : தலைவர் அவர்களே, இத்தகைய நிலையங்கள் மாவட்டத்தில் எங்கோ ஒன்று இருப்பதால், விவசாய காலங்களில் இந்தக் கருவிகளை நல்ல முறையில் சரிசெய்வதற்கு முடியாத நிலை இருக்கிறது. ஆதலால், விவசாய உற்பத்தியை முன்னிட்டாவது தாலுகா அளவிலே இப்படிப்பட்ட நிலையங்களை நிறுவ அரசுக்கு உத்தேசம் ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மாவட்டத்திற்கு ஒன்று என்று ஐந்து மாவட்டங்களில்தான் துவக்குவது பற்றி இப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லா மாவட்டங்களும் பூர்த்தியாகவில்லை. அதற்குப் பிறகு தாலுகா மட்டத்திற்குச் செல்லவேண்டும்.

நாரைக்கிணறு அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*376 **வினா.—திரு. மு. முத்தையா** : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி வட்டம், ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நாரைக்கிணறு கிராமம், நாரைக்கிணறு

1970 மார்ச் 14]

புதூர் என்ற ஊரில் வாழும் அரிசன மக்கள் குடியிருப்புக்கு அந்த ஊரில் உள்ள S. E. 200/1-A என்ற புறம்போக்கு நிலத்தை ஒதுக்கித் தரப்படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மந்தை புறம்போக்கு நிலம் என்று வகைப்படுத்தப்பட்ட 1200/2 நில அளவை எண்ணுள்ள (கேள்வியில் சொல்லியுள்ளதைப் போல் எஸ்.எப்கு 200/1-ஏ அல்ல) 2.31 ஏக்கர் பரப்பளவில், 0.87 ஏக்கர் பரப்பளவு நிலம் நத்தம் புறம்போக்காக மாற்றப்படும். இந்த நிலம், திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், நாரைக்கிணறு புதூர் என்ற சிற்றூரில் வாழும், 15 அரிசன குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்துக்கு 3 செண்ட் வீதம் ஒப்படை செய்யப்படும்.

திரு. மு. முத்தையா: தலைவர் அவர்களே, இந்த வீட்டு மனை கோரி ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகிறது. ஆகையால், நமது அரசாங்கத்திற்கு அடிக்கடி மனுக்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அரிசன வெல்பேர் ஆபீசரிடம் நானும் நேரில் சொல்லியும் இருக்கிறேன். ஆகவே, கூடிய விரைவில் வீட்டு மனைப்பட்டா கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல வருகிற அநேக மனுக்களைப் பரிசீலனை செய்து உடனுக்குடன் பட்டா கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அவர்கள் மனுவில் குறித்திருந்த சர்வே நம்பர் 200-1-ஏ என்பது இல்லை. அந்த சர்வே நம்பர் தனிப்பட்ட பட்டா நிலம். ஆகவே, கிராமத்திற்குப் பக்கத்தில் மேய்க்கால் புறம்போக்கு 1200/2 என்ற எண்ணுள்ள புறம்போக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அரசு ஆராய்ச்சி செய்த பிறகு, அந்த மேய்க்கால் புறம்போக்கை நத்தம் புறம்போக்காக மாற்றி, அந்தப் புறம்போக்கில் 2.81 ஏக்கர் நிலத்தில் 0.87 ஏக்கர் நிலம் நத்தமாக மாற்றப்பட்டு, ஒரு குடும்பத்திற்காக 3 செண்ட் வீதம் ஒப்படை செய்ய, 11 அரிசன குடும்பங்களுக்குக் கொடுத்தது போக, பாக்கியை மேய்க்கால் புறம்போக்காக வைத்துக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

விருத்தாசலத்திலுள்ள மண்டல அச்சகக் கட்டடம்.

* 377 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலத்திலிருக்கும் அரசாங்க பிராந்திய அச்சகம் (Government Regional Press) இயங்கும் கட்டடத்திற்கு மாத வாடகை எவ்வளவு?